2012 ஏப்ரல் 3]

17. (i) *யாதொரு வணிகர், அறிவிக்கை–I–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகள், இந்திய இரயில்வே உள்பட மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பிற மாநிலத் துறைகளுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் தவிர ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும்* (ii) *11–7–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/வவப/12 (R-20)/2011 ஆம் எண் அறிவிக்கைக்கு மாற்றம் செய்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 19–7–2011 ஆம் நாளிட்ட 86 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

18. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல் மற்றும் வார்டுகள் பிரித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பிஆர்–II) துறையின் 14–9–2011 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 13–7–2011 ஆம் நாளிட்ட 83 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் பணியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களில் செலுத்தத்தக்க ஆடம்பர வரியை செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–